# சட்டக்கலை அறிமுகம்–03

الفرق بين القوانين الإلهية والقوانين الوضعية

மௌலவி எம். எம்.ஸகி BA (Hons) மதீனா

## ஷரீஅத் சட்டங்களுக்கும் மனிதன் இயற்றிய சட்டங்களுக்கும் இடையிலான வேறுபாடு.

மனிதக் கரங்கள் இயற்றிய சட்டங்களாற் கவரப்பட்ட சிலர் இஸ்லாமிய சட்டக் கலை என்பது சில அறிஞர்களின் கருத்துக்களின் தொகுப்புக்களாகும். அவற்றை விமர்சிப்பதோ புறக்கணிப்பதோ இஸ்லாமிய ஷரீஅத்துக்கெதிராக விமர்சனமாகவோ புறக்கணிப்பாகவோ கருதப்பட மாட்டாது. மேலும், அவை சமகாலப் பிரச்சினைகளையோ புதிது புதிதாகத் தோன்றுகின்ற பிரச்சினைகளையோ தீர்த்து வைக்கும் திராணியற்றவை என்றெல்லாம் இஸ்லாமிய ஷரீஅதின் சட்டங்களையும் விதிகளையும் விமர்சனம் செய்வர்.

அவர்களில் இன்னும் சிலர் ஒரு படி மேலே சென்று. இஸ்லாமிய ஷரீஅத் என்பது ஒரு (வரலாறு) நாகரிகம் மாத்திரமாகும். பண்டைய கால சமூகங்களான ஆரியர்கள் எகிப்தியார்கள் போன்றோரின் நாகரிகங்கள் போன்றது எனக் கருதுகின்றனர்.

ஆனால், நிச்சயமாக இஸ்லாமிய சட்டக் கலை என்பது சட்ட வல்லுனர்களின் ஆய்வுகளின் முடிவுகளாக இருப்பினும் அவை குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரு மூலாதாரங்கள் தருகின்ற ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்தனவாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கெனில், சட்டக் கலையின் அடிப்படை அலகுகளாகக் கருதப்படுகின்ற இஜ்மா, கியாஸ் போன்றவற்றின் அடிப்படையில் வகுக்கப்படுகின்ற சட்டங்கள்கூட ஏதாவதொரு வகையில் குர்ஆன், ஹதீஸின் பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

ஆகவே, இஜ்மா என்பது ஒரு அல்-குர்ஆன் வசனத்தை அல்லது ஆதாரபூர்வமனதொரு நபிமொழியைச் சார்ந்திருக்க வேண்டும். ஆனால், அதனைத் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு இஜ்மா சார்ந்து நிற்கின்ற ஆதாரம், தருகின்ற கருப்பொருள் உறுதியற்றதாக இருந்தாலுங்கூட முஜ்தஹிதுகள் எடுக்கும் ஏகோபித்த முடிவானது அதனை உறுதியற்றது என்ற நிலையிலிருந்து மாற்றி உறுதியானது என்ற நிலைக்குக் கொண்டுவந்துவிடுகின்றது. கியாஸ் எனும் அலகின் அடிப்படையிற் பெறப்படுகின்ற விதிகளின் நிலையும் இவ்வாறுதான்.

கியாஸ் என்பது குர்ஆன் அல்லது ஹதீஸில் நேரடியாகத் தீர்வு இடம்பெறாத ஒரு பிரச்சினைக்கு, அதே போன்ற வேறொரு பிரச்சினைக்குக் குர்ஆன் அல்லது ஹதீஸ் வழங்கியுள்ள அதே தீர்ப்பை வழங்குவதாகும். இவ்விரு பிரச்சினைகளிலும்

பொதுவாக இனங்காணக்கூடியதொரு பொதுத் தன்மை (காரணம்) காணப்படல் வேண்டும். அதேபோன்று, மக்களின் நலன் காத்தல் என்ற அடிப்படையில் வகுக்கப்பட்ட சட்டங்களின் நிலையும் இவ்வாறுதான். இவ்வாறான சட்டங்கள் வகுக்கப்படக் காரணமாக அமைந்த, மக்களின் நலன் காப்பதற்கான நோக்கங்களை அல்லாவோ அவனது தூதரோ நிராகரித்திருக்கக் கூடாது. ஆகவே, ஏதோவொரு வகையில் அதற்கு இஸ்லாம் முக்கியத்துவமளித்திருத்தல் அவசியமாகும். ஷரீஅத்தின் ஏனைய அனைத்து விதிகளினுடயை நிலையும் இவ்வாறுதான் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் . இந்த வகையில் நோக்கும்போது இஸ்லாமிய சட்டக் கலையின் ஒவ்வொரு அலகும் அவை சார்ந்து நிற்கின்ற குர்ஆன், ஹதீஸின் ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாகவே அமைகின்றன. இது இஸ்லாமிய சட்டக் கலை கொண்டுள்ள தனித்துவங்களில் ஒன்றாகும்.

இதனாற்றான், குர்ஆன் மற்றும் ஹதீஸின் அடிப்படையில் அமையாத சட்டங்களை இஸ்லாமிய சட்டமேதைகள் நிராகரித்துவிடுகின்றனர்; எவ்வளவு தலைசிறந்த அறிஞர்களால் அவை தீர்மானிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டாலுங்கூட. இறைவனின் சட்டங்களுக்கிருக்கின்ற தனித்துவங்கள் மனிதன் இயற்றிய சட்டங்களுக்கு எவ்வாறு கிடைக்க முடியும்? ஏனெனில், மனோ இச்சை, குறுகிய நோக்கங்கள், உயர்மட்ட அதிகாரிகளைத் திருப்திப்படுத்தல் போன்றன கருத்திற் கொள்ளப்பட்டே அவை அமைக்கப்படுகின்றன. இதனாற்றான் , காலத்துக்குக் காலம் ஒரு சராரின் கையாடலுக்கு அவை உள்ளாகின்றன. மேலும், இஸ்லாமிய சட்டத்துறை சமகாலப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கத் திராணியற்றது என்று கூறுவது உலக வரலாறு நிரூபித்த பொய்யாகும். ஏனெனில், 13 நூற்றாண்டு காலம் பல நாடுகளிலும் பல்லின சமூகங்களிலும் இஸ்லாம் ஆட்சி செய்திருக்கிறது. அக்காலப் பகுதியில் சமூகத்தின் அனைத்துப் பிரச்சினைகளையும் இஸ்லாம் தலையிட்டுத் தீர்த்து வைத்திருக்கிறது; மிகப் பிற்பட்ட காலப்பகுதியிலுங்கூட. பிரச்சினைகளுக்கான சரியான தீர்வுகளைக் கணஅடறியும் ஆற்றல் பெற்ற இஸ்லாமிய அறிஞர்களும் மார்க்கத் தீர்ப்பு வழங்கும் முப்திகளும் எல்லாக் காலங்களிலும் இருந்து வந்துள்ளனர். அவர்கள் அவ்வப்போது எழுந்த பிரச்சினைகளுக்குப் பொருத்தமான இஸ்லாமியத் தீர்ப்புக்களை வழங்கி வந்துள்ளனர்.

ஏதோவொரு காரணத்தினால் மனிதனுடயை அன்றாட வாழ்விலிருந்தும் ஆட்சியிலிருந்தும் இஸ்லாமிய ஷரீஅத் ஓரங்கட்டப்படாதிருந்தால் அது எல்லாக் காலத்துக்கும் பொருத்தமானதாகவும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்ப்பு வழங்கக்கூடியதாகவும் திகழ்ந்திருப்பதை சமகால உலகம் கண்டிருக்க முடியும்.

ஏனெனில், பிக்ஹ் என்ற வார்த்தைக்கு பரிபாசையில் கூறப்பட்ட வரைவிலக்கணங்கூட மனிதனுடைய செயற்பாடுகள் அனைத்துக்கும் ஷரீஅத்தில் வழிமுறைகளும் விதிகளும் உண்டு என்பதை உணர்த்திக் கொண்டிருக்கிறது. மனிதனது செயற்பாடுகள், வணக்க வழிபாடுகள், கொடுக்கல் வாங்கல், குடும்பவியல், நீதித்துறை, யுத்தம், சமாதான உடன்படிக்கை போன்ற எத்துறையுடன் தொடர்பானதாக ஒரு மனிதனுடைய செயற்பாடுகள் இருந்தாலும் அவையனைத்துக்குமான சட்டங்கள் இஸ்லாமிய ஷரீஅத்தில் காணப்படுகின்றன.

உண்மை நிலை இவ்வாறிருக்க இஸ்லாமிய சட்டதுறை சமகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு வழங்கும் திராணியற்றது என்று எவ்வாறு புலம்ப முடியும்?

ஆகவே, குறைபாடு ஷரீஅத்தின் சட்டத் துறை சார்ந்ததன்று. மாறாக, நாம் அவற்றை நடைமுறைப்படுத்தாமையே குறைபாடு ஆகும் . இது மனிதனுடைய குறைபாடு என்றே கூற வேண்டும்.

அவர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டுக்களின் கருத்தும் நோக்கமும் இஸ்லாமிய சட்டத்துறை சமகாலப் பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத அளவுக்கு வலுவற்றவை. அவை, வழி கெட்டவர்களுடைய மனோ இச்சைகளுடன் இணங்கிப்போவதில்லை என்பதாயின. இக்கருத்து மிகச் சரியானதுதான். இதில் நாமும் அவர்களுடன் உடன்படுகிறோம். ஏனெனில், இஸ்லாமிய ஷரீஅத் என்பது தெளிவான அத்தாட்சிகளின் மிது நடைபோடுகின்ற ஒரு சிறந்த சமுகத்தை உருவாக்குவதற்கே முனைப்புடன் செயற்படுகிறது. ஆகவே, அதில் இடம்பெற்றுள்ள விதிகள் யாவும் மிகத் தெளிவானவை. அவை மனோ இச்சைக்கு வழிப்படுவோரின் உறைவிடமல்ல. ஏனெனில், மனோ இச்சைக்கு வழிப்படுவோர் தாம் நினைக்கும்போது சிலவற்றைத் தம்மீது (ஹலால்) ஆகுமாக்கிக் கொள்கின்றனர். இன்னும் சில சந்தர்ப்பங்களில் அவற்றையே தம்மீது (ஹராம்) தடுக்கப்பட்டவைகளாக்கிக் கொள்கின்றனர்.

அதே போன்று இஸ்லாமிய ஷரீஅத் ஒரு (நாகரிகம்) வரலாறு என்று அவர்களுடய வாதமானது அவர்கள் தமது மனோ இச்சையின் அடிப்படையிற் சொல்கின்ற வார்த்தையாகும். அல்லாஹ் அவர்களுடைய எண்ணத்தை மாற்றியமைத்துவிட்டான். இஸ்லாம் அல்லாத ஏனைய சித்தாந்தங்களைப் பின்பற்றிக் கொண்டிருந்த முஸ்லிம்கள் இன்று பல நாடுகளில் திரும்பவும் இஸ்லாத்தின் பக்கம் மீண்டுவிட வேண்டும் என்று துடியாய்து துடித்துக் கொண்டும் அதற்காகக் குரல் கொடுத்துக் கொண்டும் போராடிக் கொண்டும் உள்ளனர். இந்த முஸ்லிம் நாடுகளை ஆக்கிரமித்து அவற்றிற் தடம் பதித்துக் கொண்ட இச்சித்தாந்தங்கள் அந்நாடுகளில் குறைந்த அளவில் ஒரு நூற்றாண்டு கூட நிலைத்திருக்கத் திராணியற்றுப் போய்விட்டன. துரித கதியில் அவைதான் வெறுமனே ஒரு வரலாறாகவோ, நாகரீகமாகவோ மாறப்போகின்றன. அவற்றை இப்போதே அதிகமானோர் வெறுத்துப் புறந்தள்ளிவட்டனர். ஒரு சிலர் மாத்திரமே அவற்றிற் தங்கி வாழ்ந்து வருகின்றனர். அவற்றினூடாகவே தமக்க வாழ்வாதாரம் கிடைக்கிறது, தமது வாழ்க்கை அவற்றுடன் இரண்டறக் கலந்து விட்டது என்றும் நம்புகின்றனர். ஆனால், நிச்சயமாக அல்லாஹ் தனது மார்க்கத்தை மேலோங்கச் செய்வான். இணைவைப்பாளர்கள் அதனை வெறுத்தாலும் கூட.

இது தவிர, அல்லாஹ்வின் சட்டங்களுக்கும் மனிதன் படைத்த சட்டங்களுக்கும் இடையே ஒரு பிரதானமான வேறுபாடு தென்படுகின்றது. நிச்சயமாக ஷரீஅத்தின் சட்டத்துறையானது எப்போதும் மனிதனுடைய செயற்பாடுகளை அவன் உலகத்தில் வழங்கப்படுகின்ற கூல்கள், மறுமையில் வழங்கப்படவுள்ள கூலிகள் ஆகிய இரண்டுடனும் சேர்த்தே நோக்குகிறது. இதன் அடிப்படையில் ஒரு மனிதன்

உலகத்தில் ஒரு தண்டனையிலிருந்து தன்னைத் தக்கவைத்துக் கொண்டான் என்பது மறுமையிலும் தன்னைத் தற்காத்துக் கொண்டுவிட்டான் என்று பொருள்படாது.

சட்டத்துறை பற்றிப் போசுகின்ற வல்லுனர்கள் ஒவ்வொரு விடயத்தையும் அது அனுமதிக்கப்பட்டதா, தடை செய்யப்பட்டதா என்றும், அவற்றிற்காக முன் வைக்கப்பட்ட காரண காரியங்கள் பொருத்தமானதா இல்லையா என்றும், அந்த செயற்பாடுகள் ஷரீஅத்தின் கண்ணோட்டத்தில் செல்லுபடியாகுமா இல்லையா என்பதையும் ஆராய்வதைக் காண முடிகின்றது. இதனாற்றான் மார்க்கப்பற்றுள்ள ஒருவர் ஒரு வழக்கு விசாரணையில் குறிப்பிட்ட ஒரு பொருள் தனக்குரியது என்று நீதிபதியால் தீர்ப்பு வழங்கப்பட்டாலும்கூட ஷரீஅத்தின் பார்வையில் அப்பொருள் தனக்குரியதா, இல்லையா என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளும்வரை குறித்த பொருளைத் தனதுடைமையாக்கிக்கொள்ள மாட்டார்.

அதேநேரம் மார்க்கத்தில் பிடிப்பற்று மனிதன் படைத்த சட்டங்களுக்கு வழிப்படும் ஒருவர் நீதிபதியால் வழங்கப்பட்ட தீர்ப்பை மாத்திரம் அடிப்படையாகக்கொண்டு எப்பொருளையும் தன் கையகப்படுத்தக் கொளவார்; ஷரீஅத்தில் அது மறுக்கப்படிருந்தாலும் கூட. எந்த நேரத்திலும் நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள எந்த வகையான தந்திரோபாயங்களையும் அவர் கையாள்வார். அல்லாஹ் மிக அறிந்தவன்.